https://snapfrom.com/ https://instagramvideodownloader.net/ https://instadl.app/

முதலமைச்சர் கோப்பைப் போட்டிகள்: சென்னை மாவட்டம் முதலிடம்

சென்னை, ஜூலை 25: முதலமைச்சர் கோப்பைக்கான போட்டிகளில், சென்னை மாவட்டம் முதலிடம் பிடித்துள்ளது.

செங்கல்பட்டு, கோவை மாவட்டங்கள் முறையே இரண்டு மற்றும் மூன்றாவது இடங்களைப் பெற்றுள்ளன.

இதுகுறித்து, தமிழக அரசு சார்பில் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

முதலமைச்சர் கோப்பைக்கான மாநில அளவிலான இறுதிப் போட்டிகளில் 38 மாவட்டங்களைச் சேர்ந்த 27 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீரர்-வீராங்கனைகள் பங்கேற்றனர். இதில் சென்னை மாவட்டம் 61 தங்கம், 33 வெள்ளி, 19 வெண்கலப் பதக்கங்கள் வென்று பதக்கப் பட்டியலில் முதல் இடத்தைப் பெற்றது. 18 தங்கம், 19 வெள்ளி, 18 வெண்கலப் பதக்கங்களுடன் செங்கல்பட்டு மாவட்டம் இரண்டாவது இடத்தையும், 15 தங்கம், 13 வெள்ளி, 24 வெண்கலப் பதக்கங்களுடன் கோவை மாவட்டம் மூன்றாவது இடத்தையும் பெற்றது.

சென்னையில் உள்ள நேரு விளையாட்டரங்கில் முதலமைச்சர் கோப்பை போட்டிக்கான நிறைவு விழா செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்த விழாவில், வெற்றி பெற்றவர்களுக்கு பதக்கங்களையும், உயரிய ஊக்கத் தொகைகளையும் முதல்வர் வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் துரைமுருகன், பி.கே.சேகர்பாபு, உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

சென்னை, செங்கல்பட்டு மாவட்டங்களுக்கான கோப்பைகளை அந்தந்த மாவட்டங்களைச் சேர்ந்த ஆட்சியர்களான அருணா, ராகுல் நாத் ஆகியோர் பெற்றனர். கோவை மாவட்டம் சார்பில், மாநில ஊரக வாழ்வாதார இயக்கக இணை இயக்குநர் கே.செல்வம் பெற்றார்.

22 வீராங்கனைகளுக்கு ரூ.60 லட்சம்: பஞ்சாப் மாநிலம் அமிர்தசரஸில் தேசிய சீனியர் மகளிர் கால்பந்து போட்டியில் தமிழ்நாடு அணி முதலிடம் பெற்றது. இதில் அங்கம் வகித்த 22 வீராங்கனைகளுக்கு தமிழக அரசின் சார்பில் ரூ.55 லட்சமும், சாம்பியன்ஸ் அறக்கட்டளை சார்பில் ரூ.5 லட்சமும் என மொத்தம் ரூ.60 லட்சத்துக்கான காசோலையை உயரிய ஊக்கத் தொகையாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அளித்தார்.

ஓட்டேரி நல்லா கால்வாயில் கழிவுநீர் கலப்பதைத் தடுக்க வேண்டும்

மாநகராட்சி ஆணையர்

சென்னை, ஜூலை 25: சென்னை மாநகராட்சி பகுதிக்கு உட்பட்ட ஓட்டேரி நல்லா கல்வாயில் மாநகராட்சி ஆணையர் ஜெ.ராதாகிருஷ்ணன் செவ்வாய்க்கிழமை (ஜூலை 25) பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

சென்னை மாநகராட்சி பகுதியில் செல்லும் ஓட்டேரி நல்லா கால்வாயில் குப்பைகள் கொட்டப்படுவதால் மழைக்காலங்களில் அதிக அளவில் தண்ணீர் தேங்கும் நிலை ஏற்படுகிறது.

இதை தவிர்க்கும் வகையில் அங்குள்ள குப்பைகளை அகற்றி, கரையை பலப்படுத்தும் வகையில் மாநகராட்சி சார்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இதைத் தொடர்ந்து மாநகராட்சி ஆணையர் அம்பத்தூர், வில்லிவாக்கம், திருமங்கலம் பகுதிகளில் செல்லும் ஓட்டேரி நல்லா கால்வாயை ஆய்வு செய்தார்.

சென்னை அம்பத்தூர் ஓட்டேரி நல்லா கால்வாயில் கழிவுநீர் கலப்பதை தடுக்க எடுக்கப்பட வேண்டிய உரிய நடவடிக்கைகள் குறித்து செவ்வாய்க்கிழமை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்த ஆணையர் ஜெ.ராதாகிருஷ்ணன். உடன் அம்பத்தூர் சட்டப்பேரவை உறுப்பினர் ஜோசப் சாமுவேல், மத்திய வட்டார துணை ஆணையர் எஸ்.ஷேக் அப்துல் ரஹ்மான் உள்ளிட்டோர்.

அப்போது அவர் அலுவலர்களிடம், ஓட்டேரி நல்லா கால்வாயில் கழிவுநீர் கலப்பதைத் தடுத்து, அங்கு கொட்டப்படும் குப்பைகளை உடனடியாக அகற்றி அந்த இடத்தை தூய்மையாக பராமரிக்க வேண்டும். பருவமழைக்கு முன்னதாக கால்வாயை தூர்வாரி கரையோரங்களைப் பலப்படுத்த வேண்டும் என்றார் அவர்.

தொடர்ந்து தேனாம்பேட்டை மண்டலத்துக்குள்பட்ட உட்ஸ் சாலையில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலைப் பணிகளை ஆய்வு செய்த ஆணையர் பணிகளை விரைந்து முடித்திடவும், அப்பகுதியில் குப்பைகளின்றி தூய்மையாக வைத்திடவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

ஆய்வின் போது, அம்பத்தூர் சட்டப்பேரவைஉறுப்பினர்ஜோசப் சாமுவேல், மத்திய வட்டார துணை ஆணையர் எஸ்.ஷேக் அப்துல் ரஹ்மான், மண்டலக் குழுத் தலைவர்கள் பி.கே.மூர்த்தி, கூ.பி.ஜெயின் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

'மாநகராட்சி சாலைகளை அனுமதியின்றி தோண்டக் கூடாது'

சென்னை, ஜூலை 25: சென்னை மாநகராட்சி பகுதியில் உள்ள சாலைகளை மாநகராட்சியின் அனுமதியின்றி தோண்டக் கூடாது என மாநகராட்சி ஆணையர் ஜெ.ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலை வெட்டுப் பணிகள் மற்றும் போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவது குறித்த சேவைத்துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் ஆணையர் ராதாகிருஷ்ணன் தலைமையில் ரிப்பன் மாளிகை வளாகக் கூட்டரங்கில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதில் அவர் பேசியது: மாநகராட்சிப் பகுதிகளில் பாதாள சாக்கடை குழாய், குடிநீர் குழாய் பதித்தல், மழைநீர் வடிகால்கள், மின் துறை, மெட்ரோ ரயில் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் பணிகள் மேற்கொள்ளப்படும்போது சாலைகள் தோண்டப்படுகின்றன.

இதனால் ஏற்படும் சாலை வெட்டுக்களை அந்தந்த துறை சார்ந்த பணிகள் முடிந்தவுடன், தொடர்புடைய துறைகளுடன் ஒருங்கிணைந்து சீரமைப்புப் பணிகளை விரைவாக முடிக்க வேண்டும்.

மாநகராட்சி அனுமதியின்றி சாலை வெட்டுகளை தன்னிச்சையாக மேற்கொள்ளக் கூடாது. குடிநீர் குழாய் சாலை வெட்டுக்களை மேற்கொள்ளும்போது, அனுமதி பெற்று மேற்கொள்ள வேண்டும். சாலைகளில் உள்ள பள்ளங்களையும் சீர்செய்ய வேண்டும்.

வாகனம் நிறுத்தினால் நடவடிக்கை: மாநகராட்சி பகுதிகளில் தன்னிச்சையாக வாகனங்களை நிறுத்துவோர் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு அந்த வாகனங்களை கைப்பற்ற வேண்டும். மேலும், நீண்ட நாள்களாக சாலையில் நிற்கும் வாகனங்களை அகற்றி போக்குவரத்துக்கு வழிவகை செய்ய வேண்டும்.

பருவமழைக்கு முன்னதாக மழைநீர் வடிகால் பணிகளை முடிக்க வேண்டும். விடுபட்ட மழைநீர் வடிகால் இணைப்புப் பணிகளையும் உரிய துறைகளுடன் ஒருங்கிணைந்து முடிக்க வேண்டும் என்றார் அவர்.

இக் கூட்டத்தில் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் ஆர். கிர்லோஷ் குமார், இணை ஆணையர் (பணிகள்) ஜி.எஸ்.சமீரன், தெற்கு வட்டார துணை ஆணையர் எம்.பி.அமித், போக்குவரத்து காவல் துணை ஆணையர் (கிழக்கு) சமே சிங் மீனா மற்றும் தொடர்புடைய துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

விழிப்புணர்வு...

சென்னை வேப்பேரி சந்திப்பில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற சாலைப் பாதுகாப்பு வார விழாவில் சாலைப் பாதுகாப்பு பயிற்சி மாணவிகளுடன் கலந்துரையாடிய சென்னை பெருநகர் காவல் ஆணையர் சந்தீப் ராய் ரத்தோர். உடன் போக்குவரத்து இணை ஆணையர் கபில் சி சரத்கர்.

சென்னையில் நகர்ப்புற காலநிலை திரைப்பட விழா

சென்னை, ஜூலை 25: சென்னையில் நகர்ப்புற காலநிலை குறித்த திரைப்பட விழா ஜூலை 27 முதல் 29 வரை நடைபெறுகிறது.

'சிட்டிஸ்' திட்டத்தின் ஒரு பகுதியாக நகர்ப்புறங்களில் காலநிலை மாற்றம், அதனால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்புகள் குறித்து திரைப்பட விழா நடத்தப்படுகிறது.

இதில் நகர்ப்புற குடியிருப்புகளில் காலநிலை மாற்றத்தின் சமூக மற்றும் பொருளாதார தாக்கங்கள், சுற்றுச்சூழலை பாதுகாக்க பொதுமக்களை ஊக்குவித்தல் உள்ளிட்ட தலைப்புகளில் 20 நாடுகளைச் சேர்ந்த 150 திரைப்படங்கள் வரப்பெற்றன.

சென்னை மாநகராட்சி மற்றும் அலையன்ஸ் ஃப்ரான்சேஸ் ஆஃப் மெட்ராஸ் இணைந்து சென்னை நுங்கம்பாக்கத்தில் ஜூலை 27- முதல் 29-ஆம் தேதி வரை திரைப்பட விழாவை நடத்துகின்றன. இந்த விழாவில் 10 நாடுகளைச் சேர்ந்த 16 படங்கள் திரையிடப்படவுள்ளன.

WOMEN PROFESSIONALS WANTED

प्रदानபிரதான் Pradan

பிரதான் (PRADAN) நிறுவனம் இந்தியாவின் எட்டு மாநிலங்களில் ஊரக வளர்ச்சி திட்டங்களை மேற்கொண்டு வரும் ஒரு முன்னணி அரசு சாரா அமைப்பாகும். அதன் ஊரக வளர்ச்சித் திட்டங்களில் பணி புரிய குறைந்தது இரண்டு ஆண்டுகள் பணி அனுபவம் கொண்ட, பெண் தொழில்நுட்பப் பணியாளர்களிடம் (Women Professionals) இருந்து விண்ணப்பங்களை வரவேற்கிறது.

பணி அனுபவம்

வேளாண்மை, கால் நடை வளர்ப்பு, பொறியியல், சமூக மேம்பாட்டு பணிகள், குழந்தைகள் மற்றும் பெண்கள் முன்னேற்றம் உள்ளிட்ட எந்த துறையில் இருந்தாலும் கணக்கில் கொள்ளப்படும்.

- ஆண்டு ஊதியம் (CTC) ரூ 8.6 லட்சம் முதல்
- வருங்கால வைப்பு நிதி (PF)
- மருத்துவ மற்றும் இதர காப்பீட்டுப் பலன்களும் உண்டு

மேலதிக தகவல்களுக்கும் விண்ணப்பம் அனுப்பவும்
http://www.pradan.net/join-us/#careers

தமிழ்நாடு அரசு
நெடுஞ்சாலைத்துறை
கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், திருவண்ணாமலை
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.15/2023-2024/தவஆ/நாள்-22.07.2023

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர் (நெ). க(ம)ப, திருவண்ணாமலை வட்டம் அவர்களால், சி.ஆர்.ஐ.டி.பி 2023-24 செய்யார், திருவண்ணாமலை, வேலூர் மற்றும் இராணிப்பேட்டை (நெ), க(ம)ப கோட்டங்களைச் சார்ந்த பணிகளில் செய்யார் (நெ) க(ம)ப, கோட்டத்தின் ஒரு பணிக்கு இரு உறைமுறையிலும் இதர மூன்று பணிகளுக்கு ஒரு உறை முறையிலும் (மொத்தம் 4 பணிகளுக்கு) இணையவழி மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் 16.08.2023 அன்று 12.00 மணி வரை வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராயமதிப்பு, முன்வைப்புத்தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை https://tntenders.gov.in என்ற அரசு இணையதளத்தில் 29.07.2023 முதல் தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

செ.ம.தொ.இ/3949/ஒப்பந்தப்புள்ளி/2023
கண்காணிப்புப் பொறியாளர் (நெ) க(ம)ப வட்டம், திருவண்ணாமலை
"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

தமிழ்நாடு அரசு
இந்து சமய அறநிலையத்துறை
ஒப்பந்தவகை ஒட்டு மொத்தம்/இனவிலைமுறை
பின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: 02 / 2023-24/நாள்: 21.07.2023 (இரு உறையிட்ட ஒப்பந்தப்புள்ளி)

செயல் அலுவலர், அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோவில், திருவாரூர் நகர் மற்றும் வட்டம், திருவாரூர் மாவட்டம், அவர்களால் தமிழ்நாடு அரசு துறை/ தமிழ்நாடு அரசு நிறுவனங்களில் முந்தை வகுப்பில் பதிவு பெற்ற ஒப்பந்தக்காரிடமிருந்து கீழ்கண்ட பணிக்கான பின்னணு ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்படுகிறது.

வ. எண்	பணியின் பெயர்	பணியின் தோராய மதிப்பு (ரூ. லட்சத்தில்) (சரக்கு மற்றும் சேவை வரி 18% உட்பட)	முன் வைப்புத் தொகை	பணிக் காலம்	ஒப்பந்தக்காரர் தகுதி	முன்வைப்புத் தொகை வரவு வைத்துக் கட்ட வேண்டிய அலுவலர்
1	அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோவில், திருவாரூர், இரண்டாம் பிரகாரத்தில் கருங்கல் தளம் அமைக்கும் பணி	ரூ.518.90/-	ரூ. 2,69,500	18 மாதங்கள்	வகுப்பு II (ரூ.10 கோடி வரை) மற்றும் அதற்கு மேல்	செயல் அலுவலர் அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோவில், திருவாரூர் (பின்னணு முறை)

1.திருவாரூர் மாவட்டத்தில் மேற்கண்ட பணிக்கான விபரம் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் இதர விபரங்களுக்கு https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியினை அணுகவும். 2. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் கிடைக்கப்பெறும் நாள் 01.08.2023 முதல் 30.08.2023 மாலை 5.00 மணி வரை 3. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் சமர்ப்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம் 30.08.2023 மாலை 5.00 மணி வரை 4.ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலமாக திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் 31.08.2023 முற்பகல் 11.00 மணி முதல்

செயல்அலுவலர், அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோவில், திருவாரூர் வட்டம் மற்றும் மாவட்டம்.

செ.ம.தொ.இ/3985/ஒப்பந்தப்புள்ளி/2023
"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்."

மவுண்ட் ரோடு கிளை
எண். 1, கிளப் ஹவுஸ் சாலை, அண்ணாசாலை, சென்னை-600002.
போன் : 044-2345 4278/279/280

வேண்டுமென்றே கடனை திருப்பி செலுத்தாதவர்கள் என்று கூறும் அறிவிப்பு

RBI ன் மாஸ்டர் சுற்றறிக்கை நாள் 01.07.2015க்கிணங்க குழு அங்கத்தினர்கள் (COE) 02.06.2023 அன்று வெளியிட்ட ஆணைப்படி கீழே குறிப்பிடப்பட்டுள்ள நபர்கள் வேண்டுமென்றே கடனை திருப்பி செலுத்தாதவர்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளனர்.

கடன்தாரர் பெயர் : M/s. முத்து ஃபாஸ்டா டிரேடர்ஸ், எண்.93, ட்ரங்க் ரோடு, போரூர், சென்னை-600 116. திரு. K. சந்திரசேகரன் த/பெ. கந்தசாமி, 76, A3, காமராஜ் சாலை, சீப்ராஸ் கார்டன், அண்ணாமலைபுரம், சென்னை-600 028. திரு. M. திவ்யரூபன் த/பெ. மதிவாணன், எண்.93/2, ட்ரங்க் ரோடு, போரூர், சென்னை-600 116. திரு. N. சரவணன் த/பெ. நாராயணன், எண்.6/46, ராமானுஜம் தெரு, தியாகராயநகர், சென்னை-600017.

குழு அங்கத்தினர்களால் (COE) மேலே குறிப்பிடப்பட்ட இந்த முடிவினை பற்றிய தகவல் சம்பந்தப்பட்ட கடன்தாரர் / ஜாமீன்தாரர்களுக்கு 13.07.2023 அன்று அனுப்பப்பட்டது. ஆனால் அவர்களால் பெறப்படாமல் திரும்ப வந்துவிட்டது. எனவே இந்த அறிவிப்பினை பிரசுரிப்பதன் மூலம் சம்பந்தப்பட்டவர்களை கேட்டுக் கொள்வது யாதெனில் குழு அங்கத்தினர்களின் இந்த ஆணையை அவர்கள் சம்பந்தப்பட்ட கிளையிலிருந்து பெற்று இந்த ஆணைக்கு எதிரான தங்களது விவாதங்களை வேண்டுமென்றே கடனை திருப்பி செலுத்தாதவர்கள் பரிசீலனை குழுவுக்கு முன்பாக இந்த அறிவிப்பு பிரசுரமான 15 நாட்களுக்குள் சமர்ப்பிக்கலாம்.

இடம் : சென்னை
தேதி : 25.07.2023

தலைமை மேலாளர்
பாங்க் ஆப் பரோடா

டிவிஎஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்

(முன்னர் சுந்தரம்-கிளேட்டன் லிமிடெட் என்று அழைக்கப்பட்டது)
பதிவு அலுவலகம் : "சைதன்யா", எண்.12, காதர் நவாஸ் கான் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை 600 006.
தொலைபேசி : 044 - 28332115, தொலைநகல் : 044 - 28332113 இணையதளம் : www.sundaram-clayton.com
மின்னஞ்சல் : corpsec@sundaramclayton.com CIN : L35999TN1962PLC004792

30 ஜூன் 2023 அன்று முடிவடைந்த காலாண்டுக்கான தனித்த மற்றும் ஒருங்கிணைத்த நிதிநிலை முடிவுகள்

(ரூ. கோடிகளில்)

வ. எண்	விவரங்கள்	தனித்தது			ஒருங்கிணைந்தது		
		முடிவடைந்த காலாண்டு		முடிவடைந்த ஆண்டு	முடிவடைந்த காலாண்டு		முடிவடைந்த ஆண்டு
		30.06.2023	30.06.2022	31.03.2023	30.06.2023	30.06.2022	31.03.2023
		(தணிக்கை செய்யப்படாதது)		(தணிக்கை செய்யப்பட்டது)	(தணிக்கை செய்யப்படாதது)		(தணிக்கை செய்யப்பட்டது)
1	வியாபார நடவடிக்கைகளின் மூலம் மொத்த வருமானம்	589.02	512.89	2,206.72	9,587.99	7,699.13	33,690.33
2	விதிவிலக்கான வகைகள் மற்றும் வரிக்கு முன் நிகர லாபம் / (நஷ்டம்)	48.02	22.99	235.97	614.04	460.84	1,924.47
3	விதிவிலக்கான வகைகளுக்குப் பின் வரிக்கு முன் நிகர லாபம் / (நஷ்டம்)	44.69	38.71	326.69	610.71	475.49	2,013.32
4	விதிவிலக்கான வகைகள் மற்றும் வரிக்கு பின் நிகர லாபம் / (நஷ்டம்)	27.95	28.43	273.11	409.41	326.00	1,333.17
5	நடப்புக் காலத்திற்கான விரிவான மொத்த வருமானம் [நடப்புக் காலத்திற்கான வரிக்குப் பின் லாபம் மற்றும் (வரிக்குப் பின்) இதர விரிவான வருமானம்]	25.69	31.70	276.48	359.35	319.65	1,399.02
6	செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் (முகமதிப்பு ஒவ்வொரு பங்கிற்கும் ரூ.5/-)	10.12	10.12	10.12	10.12	10.12	10.12
7	ரிசர்வுகள் (மறு மதிப்பீடு ரிசர்வுகள் நீங்கலாக)	-	-	700.43	-	-	3,230.87
8	பங்கு பிரீமியம் கணக்கு	36.42	36.42	36.42	36.42	36.42	36.42
9	நிகர மதிப்பு	746.14	2,923.07	697.28	6,292.60	5,244.79	5,898.84
10	நிறுவையில் உள்ள கடன் (NBFC துணை நிறுவனம் நீங்கலாக)	770.55	736.88	669.61	5,214.11	3,288.56	3,795.31
11	நிறுவையில் உள்ள திருப்பி எடுக்கக்கூடிய முன்னுரிமை பங்குகள்	2,346.92	-	2,346.92	2,346.92	-	2,346.92
12	கடன் சம விகிதாசாரம் (NBFC துணை நிறுவனம் நீங்கலாக, விதிவிலக்கான வகைகள் உட்பட) (மடங்கு)	1.01	0.25	0.93	4.11	2.16	3.75
13	பங்கு ஒன்றிற்கான சம்பாத்தியம் (முக மதிப்பு ரூ.5/- ஒரு பங்குக்கு) (ஆண்டு விகிதம் செய்யப்படவில்லை)						
	(அ) அடிப்படை (ரூபாயில்)	13.81	14.05	134.99	97.09	79.08	321.10
	(ஆ) டைலூட்டட் (ரூபாயில்)	13.81	14.05	134.99	97.09	79.08	321.10
14	மீட்கக்கூடிய மூலதன ஒதுக்கீடு	- பொருந்தாது -					
15	மீட்கக்கூடிய கடன் பத்திர ஒதுக்கீடு	- பொருந்தாது -					
16	கடன் சேவை அளிப்பு விகிதாசாரம் (NBFC துணை நிறுவனம் நீங்கலாக) (மடங்கு)	2.73	1.67	2.49	1.17	2.79	3.60
17	வட்டி சேவை அளிப்பு விகிதாசாரம் (NBFC துணை நிறுவனம் நீங்கலாக) (மடங்கு)	6.34	5.68	8.53	8.22	11.13	11.57
18	நடப்பு விகிதம் (மடங்கு)	0.87	0.98	0.95	1.01	0.96	0.89
19	நீண்ட கால கடன் விகிதம் செயல்பாட்டு மூலதனத்திற்கு (மடங்கு)	-	5.91	10.14	3.08	4.21	3.16
20	கணக்குகளின் மூலம் பெறவேண்டியவற்றிற்கு வராக்கடன் விகிதம் (மடங்கு)	-	-	-	-	-	-
21	நடப்பு பொறுப்புகளின் விகிதம் (மடங்கு)	0.54	0.62	0.60	0.61	0.60	0.65
22	மொத்த கடனுக்கு மொத்த சொத்துக்களின் விகிதம் (மடங்கு)	0.38	0.38	0.30	0.61	0.54	0.61
23	கடனாளிகளின் சுழற்சி விகிதம் (மடங்கு)	7.54	7.08	7.30	22.96	19.96	23.71
24	சரக்கிருப்பு சுழற்சி விகிதம் (மடங்கு)	3.53	2.91	3.11	7.14	9.94	9.91
25	செயல்பாட்டு இலாப விகிதம் (%)	12.71	10.97	12.00	13.16	12.54	12.66
26	நிகர இலாப விகிதம் (%)	4.74	3.25	8.27	4.38	4.38	3.69

குறிப்புகள் :

1. கூட்டு ஏற்பாடு திட்டத்திற்கு மாண்புமிகு நிறுவனங்களின் தேசிய சட்டத் தீர்ப்பாயம், சென்னை வழங்கிய ஆணையின்படி டிவிஎஸ் ஹோல்டிங்ஸ் பிரைவேட் லிமிடெட், நிறுவனத்துடன் ஒன்றிணைக்கப்பட்டது. அதன் விளைவாக நிறுவனத்தின் பெயர் டிவிஎஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட் என்று மாற்றப்பட்டுள்ளது.
2. மேற்கண்ட நிதிநிலை முடிவுகள் 2015ம் வருடத்தைய செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள், விதி 33 மற்றும் 52ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள விரிவான நிதிநிலை முடிவுகளின் சுருக்கம் ஆகும். நிதிநிலை முடிவுகளின் முழு வடிவம் ஸ்டாக் எக்ஸ்சேஞ்சுகளின் இணையதளம் (www.bseindia.com மற்றும் www.nseindia.com) மற்றும் கம்பெனியின் இணையதளம் www.sundaram-clayton.com ஆகியவற்றிலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.
3. கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 133 மற்றும் அதன் கீழான விதிகள் மற்றும் கம்பெனிகள் (இந்தியன் அக்கவுண்டிங் ஸ்டாண்டர்டு) 2015 விதிகளின்படி மேற்கண்ட தனித்த மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

டிவிஎஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்டிற்காக
(முன்னர் சுந்தரம்-கிளேட்டன் லிமிடெட் என்று அழைக்கப்பட்டது)
ஒப்பம்/-
R. கோபாலன்
தலைவர்

தேதி : 25.07.2023

மாண்புமிகு கடன் மீட்பு தீர்ப்பாயம் - II, சென்னை முன்னிலையில்
O.A. எண்.187/2023

இந்தியன் வங்கி, ஒடுக்கப்பட்ட சொத்துக்கள் மேலாண்மை கிளை, பிரதிநிதியாக இதன் தலைமை மேலாளர், எண்.55, எத்திராஜ் சாலை, IIவது தளம், வெல்லிங்டன் எஸ்டேட், எழும்பூர், சென்னை - 600 008. ...விண்ணப்பதாரர்

-எதிரிடை-

M/s. வானதி எக்ஸ்போர்ட்ஸ் பி. லிட். (கடன்தாரர்) பிரதிநிதியாக இதன் இயக்குனர்கள் மற்றும் மூன்று பிறர் ...பிரதிவாதிகள்

பெறுநர்,

(1) M/s. வானதி எக்ஸ்போர்ட்ஸ் பி. லிட்., (கடன்தாரர்), பிரதிநிதியாக இதன் இயக்குனர்கள், புதிய எண்.3/1, 2வது தளம், ஃபிளாட் எண்.2/5, ராமச்சந்திரா ரோடு, தி. நகர், சென்னை - 600 017.

(2) திரு. P. மினிஷ் குமார், எண்.55-A, பிருந்தாவன் அவென்யூ, மேற்கு தாம்பரம், சென்னை - 600 045.

(3) திருமதி. N. சாய்லட்சுமி, எண்.15, திருமூர்த்தி மெயின் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை - 600 034.

(4) திரு. சுந்தரேஸ்வரன் செல்லப்பன், எண்.14/12, கன்னிகா காலனி, 1வது தெரு, ஆதம்பாக்கம், சென்னை - 600 061. ...பிரதிவாதிகள்

அழைப்பாணைகள்

விண்ணப்பதாரர் வங்கியானது, ரூ3,21,94,499/- (ரூபாய் மூன்று கோடியே இருபத்து ஒரு லட்சத்து தொண்ணூற்று நான்காயிரத்து நானூற்று தொண்ணூற்று ஒன்பது மட்டும்) தொகையை உங்கள் அனைவரிடமிருந்தும் மீட்பதற்காக மேற்கூறிய OA எண்.187/2023 விண்ணப்பத்தை தாக்கல் செய்துள்ளது என்பதை அறியவும். உங்களுக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணைகள் பட்டுவாடா ஆகாமல் திரும்பிவிட்டன. எனவே, மாட்சிமை தங்கிய தீர்ப்பாயம் 25.08.2023 அன்று தாங்கள் ஆஜராவதற்காக பத்திரிக்கை பிரகாரம் வெளியிட 13.07.2023 அன்று உத்தரவிட்டுள்ளது. எனவே நீங்கள் மாட்சிமை தங்கிய தீர்ப்பாயம் DRT-II, சாஸ்திரி பவன், 6வது தளம், ஹாடோஸ் ரோடு, சென்னை - 600 006-ல் உள்ள புதிய கூடுதல் அலுவலக கட்டிடங்கள் முன்னிலையில் நேரிடையாக அல்லது வழக்கறிஞர் மூலமாக 25.08.2023 அன்று காலை 10.30 மணிக்கு ஆஜராகவும். அவ்வாறு மேற்குறிப்பிட்டுள்ள தேதியன்று நீங்கள் ஆஜராக தவறினால் நீங்கள் இல்லாத நிலையிலும் சட்டப்படி முடிவு செய்யப்படும்.

C. ராமையா, வழக்கறிஞர்
எண்.280, புதிய கூடுதல் சேம்பர்ஸ், உயர் நீதிமன்ற கட்டிடம், எஸ்பிளனேடு, சென்னை - 600 104.
மொபைல் எண். : 9841261067 & 7401753668.
மின்னஞ்சல் : ramaiah19715@gmail.com

Featherlite DEVELOPERS

CAUTION NOTICE

This is to notify all concerned, as well as general public, that Featherlite Group is now a diversified conglomerate in a variety of businesses such as Office Furniture, Home Furniture, Outdoor Furniture, Real Estate, Private Equity, Business Centres/Co-Working Spaces and more. Featherlite Group operates under the name and style of Featherlite Developers for its real estate business and under the name and style of Featherlite Products Private Limited and Featherlite Office System Private Limited for its business of manufacturing, trading and marketing furniture (hereinafter collectively referred to as "FeatheriteFeatherlite is the soleand absolute owner of the trademark "FEATHERLITE") "FEATHERLITE DEVELOPERS" (wordmark) including the device markin India(collectively Featherlite referred to as "Featherlite Mark").

It has come to Featherlite's attention that one Mr. Venkat, purportedly residing at Pallavaram, Chennai has illegally sought to promote a company in the name and style of Featherlite Tec. The said person including his assigns, representatives and affiliates purport to use the mark"Featherlite Tec" ("Featherlite Tec") which is infringing the Featherlite Mark and are using the name of Featherlite in an unauthorized manner to promote its business. It is to be noted that Featherlite does not engage in the business of insurance brokerage and the said Featherlite Tec is not part of the Featherlite Group. The said Featherlite Tec has sought to use the Featherlite Mark in its website and other promotional channels without due authorization.

All Concerned in general are hereby advised and cautioned not to be lured by any such, promise of services or unusual employment opportunities offered by the said Featherlite Tec in the name of Featherlite. Featherlite cannot assume any liability whatsoever for the extension of the alleged services, business opportunities or employment opportunities offered by the said Featherlite Tec and any contract or engagement with the Featherlite Tec shall not be binding either on Featherlite or its affiliates.

If anyone is found to be involved in unauthorized use of the name and registered trademark of Featherlite, Featherlite will be constrained to take legal action against such unauthorized use at the costs and consequences of the said party.

Featherlite is also contemplating appropriate civil and criminal proceedings against Mr. Venkat and all persons acting under him including his assigns, representatives and affiliates, for intentionally infringing the FeatheriteMark besides recovery of all benefits earned out of such infringement.